www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 3rd Term Examination - 2023

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் Communication & Media Studies | Three Hours 10 min / Gr -12 (2023) | 29 | T | I,II |

**அறிவுறுத்தல் :-**

- பகுதி I எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- பகுதி I புள்ளிகள் வீதம் மொத்தம் 20 புள்ளிகள்.
- பகுதி II நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.
- பகுதி II ஒவ்வொரு வினாவிற்கும் 20 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

### பகுதி – I

❖ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

❖ 1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), 3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான விடையினை தெரிவு செய்து. புள்ளடித்தாளில் புள்ளடியிடுக.

01. தொடர்பாநர் மற்றும் பெறுநர் ஆகியோரின் வகிபங்குகள் பரிமாற்றப்படுதலை தொடர்பாடல் மாதிரியொன்றின் மூலம் தெளிவாக அறிமுகப்படுத்தியவர்.
1) டேவிட். k. பெர்லோ
2) ஷனோன் மற்றும் வீவர்
3) ஷராம் மற்றும் ஒஸ்குட்
4) ஹரோல்ட். டீ. லாஸ்வெல்
5) எட்வேட் சபீர்

02. பின்வருவனவற்றுள் எது தொடர்பாடலின் அடிப்படைக்கூறாக அமையாதது.
1) மூலம்
2) பின்னூட்டம்
3) இடையூறு
4) வாயிற்காப்போர்
5) தொடர்பாடல் வழி

03. இணையத்தின் ஊடாக டிஜிட்டல் நூலகத்திற்குள் நுழைந்து. தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் உங்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதற்கு உங்களுக்கு தேவைப்படும் காரணி பின்வருவனவற்றுள்.
1) தரவுத்தளம்
2) இடைத்தொடர்பு
3) தானியங்கி
4) அதிவேக செய்தியனுப்புகை
5) வலையமைப்பு

04. கமலியும், நிமலியும் சிறந்த நண்பர்கள் ஆவார்கள். ஆனாலும் ஒருவருக்கொருவர் அவர்களை ஏமாற்றுவதற்காக சில உபாயங்களைக் கையாண்டார்கள். அத்தகைய சந்தர்ப்பத்தில் இனங்காணக் கூடியது.
1) ஆளிடைத் தொடர்பாடல்
2) கூட்டுத் தொடர்பாடல்
3) அகமுகித் தொடர்பாடல்
4) வாய்மொழியற்ற தொடர்பாடல்
5) முறைசார்த் தொடர்பாடல்

05. ஊடகத்தால் முன்வைக்கப்படும் தகவல்களை நுகரவும், பகுப்பாய்வு செய்யவும், மதிப்பிடவும், படைப்பாக்கம் செய்யவும் பெற்றுக் கொள்ளும் செயன்முறை குறிப்பது.
1) ஊடக மீள்வார்ப்பு
2) ஊடகப் பகுப்பாய்வு
3) ஊடகப்புலக்காட்சி
4) ஊடக திறனாய்வு
5) ஊடக விளங்கறிவு

06. பின்வருவனவற்றுள் பிரசித்த பண்பாட்டை பரவலடையச் செய்யக் கூடிய ஊடகத்தினுள் மிகப் பொருத்தமானது.
1) தொலைக்காட்சி
2) வானொலி
3) சினிமா
4) இணையம்
5) செய்திப்பத்திரிகை



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

07. எதிர்பார்த்த பெறுபேறுகளை முன்வைக்கும் போது வெற்றியினை அடைதல் வினைத்திறனாகும். வினைத்திறனான தகவலில் காணப்படும் பிரதான பண்புகளில் உள்ளடங்காதது.
1) எளிமைத் தன்மை 2) திரிபுபடுத்தல் 3) விசேடதன்மை
4) கட்டமைப்பு 5) இசைவாக்கம்

08. விமர்சன ரீதியிலான பெறுநரிடம் காணப்பட வேண்டிய பண்புகளுள் பொருத்தமானது.
1) அர்த்தம் 2) நம்பகத்தன்மை 3) தூண்டல்
4) மாறாத்தன்மை 5) சாரம்சப்படுத்தல்

09. வாய்மொழி சாராத் தொடர்பாடல் பற்றிய சரியான கூற்று.
1) உடல் மொழியால் மாத்திரம் நிகழ்த்தப்படுவது.
2) உடல் மொழியின் அர்த்தம் பிரதேசத்திற்கும் பிரதேசம் வேறுபடலாம்.
3) மேளம், சைரன் போன்ற ஒலிகள் உள்ளடக்கப்படுவதில்லை.
4) சைகை மொழியை மாத்திரம் பயன்படுத்துவது.
5) எழுதும் போது பயன்படுத்தப்படுவதில்லை.

10. நாட்டார் ஊடகங்களின் பின்வரும் இயல்புகளை கருத்திற் கொள்க.
A. அது வழக்கமாக வாய்மொழி சார்ந்தது.
B. அது நிர்ணயிக்கப்பட்ட அடையாளத்தைக் கொண்டது.
C. அது ஒரு வடிவத்தை மாத்திரம் கொண்டது.
D. அந்தந்தப் பகுதிக்குரிய விசேடமானவையாகும்.
மேற்குறிப்பிட்ட கூற்றுக்களில் சரியானவை.
1) A, B ஆகியன 2) A, D ஆகியன 3) B, C ஆகியன
4) B ,D ஆகியன 5) C, D ஆகியன

11. போலியான நுகர்வோர் தேவைகளை உருவாக்கும் பிரதான வெகுசன ஊடகப் புலம்.
1) வானொலி 2) சினிமா 3) இணையம்
4) சமூக ஊடகம் 5) தொலைக்காட்சி

12. பொதுமக்கள் உழைப்பினை செயற்றிறனுடன் பயன்படுத்துவதாக அடையாளப்படுத்தக்கூடிய பண்பாட்டு வடிவமாக கருதப்படுவது.
1) நாட்டார் பண்பாடு 2) பூகோளப்பண்பாடு 3) ஊடகப் பண்பாடு
4) பிரசித்த பண்பாடு 5) வெகுசனப் பண்பாடு

13. சர்வதேச ரீதியில் தொடர்பாடல் கற்கை நெறியினை முதன் முதலில் அறிமுகப்படுத்திய பல்கலைக்கழகம்.
1) தெகிவளை கனிஸ்ட பல்கலைக்கழகம்
2) பெல்சில்வேனியாப் பல்கலைக்கழகம்
3) சிக்காகோ இலினோயிலஸ் பல்கலைக்கழகம்
4) உமேயாப் பல்கலைக்கழகம்
5) ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம்

14. வெகுசன ஊடகங்களில் ஆகக் குறைந்தளவில் புலப்படக்கூடியதாக அமைவது.
1) தொழில்நுட்ப சாதனப் பயன்பாடுகள் காணப்படுகின்றமை.
2) தூண்டற் செயற்பாடு நிகழும்.
3) அமைப்பொழுங்கு காணப்படுகின்றமை.
4) நாட்டார் மொழியின் பயன்பாடு.
5) பல்வகைப்பட்ட பெறுநர் கூட்டத்தினைக் கொண்டது.

15. ஊடக விளங்கறிவு தொடர்பான பின்வரும் கூற்றுக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.
A. ஊடக விளங்கறிவின் அடிப்படையானது வாசிக்கவும், எழுதவும் முடியுமான தகமையாகும்.
B. ஊடக விளங்கறிவானது அச்சூடகத்துடன் அதிகம் தொடர்புடையது.
C. ஊடக விளங்கறிவு என்பது ஊடக உள்ளடக்கத்தினை புரிந்துணர்வுடன் பயன்படுத்துவதாகும்.
D. செய்திகளை உருவாக்குவதும் திறனாய்வதும் ஊடக விளங்கறிவின் ஒரு பகுதியாகும்.
பின்வரும் கூற்றுக்களில்
1) A மாத்திரம் உண்மையாகும்.
2) B மாத்திரம் உண்மையாகும்.
3) A, B மாத்திரம் உண்மையானவை D தவறானது.
4) A, B ஆகியன உண்மையானவை. C, D தவறானவை.
5) A, B ஆகியன தவறானவை C, D உண்மையானவை.



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

16. நாளாந்த அடிப்படையில் மக்கள் பொதுவாகப் பயன்படுத்தும் தொடர்பாடல் வடிவமாக கருதப்படுவது.
   1) வாய்மொழி சாராத் தொடர்பாடல்
   2) வாய்மொழித் தொடர்பாடல்
   3) செவிப்புலத் தொடர்பாடல்
   4) காட்சித் தொடர்பாடல்
   5) முறைசாராத் தொடர்பாடல்

17. வெகுசன ஊடகத்துறையானது பெருமளவிலான வாயிற்காப்பாளர்களைக் கொண்டுள்ளது. இவர்களின் அடிப்படைப் பணியாக அமைவது.
   1) ஊர்ஜிதப்படுத்தப்பட்ட தகவல்களை வெளியிடல்.
   2) நிதிசார் ஆதாயங்களைப் பெற்றுக் கொள்ளல்.
   3) ஆட்சியாளர்களை வெளியகற்றும் விதமாகப் பணியாற்றுதல்.
   4) செய்தி விநியோகத்தினைக் கட்டுப்படுத்தல்.
   5) தீங்கு பயக்கும் விளைவுகளை வெளியிடல்.

18. பாரம்பரிய ஊடகங்களின் முக்கியத்துவங்களில் பொருத்தமற்றது பின்வருவனவற்றுள்.
   1) பொதுமக்கள் பாரம்பரிய ஊடகங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளனர்.
   2) அவற்றில் பயன்படுத்தப்படும் குறியீடுகளும் சைகைகளும் பரிச்சயமானவை.
   3) அவற்றில் செயலூக்கமுள்ள பார்வையாளரின் பங்கேற்பு இருப்பதில்லை.
   4) பாரம்பரிய ஊடகங்கள் பிரதிநிதித்துவம் செய்பவை உயர்குடி மக்களின் சிந்தனைகள் அல்ல.
   5) குறைந்த செலவுடன் உருவாக்கக் கூடியவையாகும்.

19. பூகோள பண்பாட்டின் விருத்தி நிகழத் தொடங்கியது.
   1) 20ம் நூற்றாண்டின் இறுதியில்
   2) உரோமானிய காலத்தின் இறுதியில்
   3) நவீன காலத்தின் தொடக்கத்தில்
   4) மத்திய காலத்தின் இறுதியில்
   5) புராதன காலத்தின் இறுதியில்

20. பெறுநர் பற்றிய மிகச் சரியான கூற்று
   1) இரு நபர்கள் இல்லாத பட்சத்தில் பெறுநர் காணப்பட மாட்டார்.
   2) பெறுநரின் வகிபங்கு மாற்றப்படாது.
   3) வியாக்கியானம் செய்யக்கூடிய திறன்களை எப்போதும் கொண்டிருப்பார்.
   4) பெறுநரின் விளங்கறிவு சமனாக இருக்க மாட்டது.
   5) பெறுநரின் இரசனைப் பகுதி பரந்திருக்கக் காணப்படும்.

## பகுதி - II

- **எவையேனும் நான்கு வினாக்களிற்கு மாத்திரம் விடை தருக.**
- **ஒவ்வொரு வினாவிற்கும் இருபது (20) புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.**

01. "தொடர்பாடல் ஓர் சமூகச் செயன்முறையாகும்."
   1) மத வழிபாட்டு நிகழ்ச்சியொன்றில் முறைசார் தொடர்பாடல் இடம்பெறும் இரண்டு சந்தர்ப்பங்களைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)
   2) ஆளிடைத் தொடர்பாடலின் இயல்புகள் நான்கினை பெயரிட்டு, அவற்றுள் இரண்டினைப் பற்றி சுருக்கமாக விபரிக்குக. (4 புள்ளிகள்)
   3) முறைசார் தொடர்பாடலுக்கும், முறைசாரா தொடர்பாடலுக்கும் இடையிலான வேறுபாடுகள் மூன்றினை விபரிக்குக. (6 புள்ளிகள்)
   4) நீர் விரும்பும் வெகுசன ஊடகம் ஒன்றினை தெரிவு செய்து தொடர்பாடல் செயன்முறையின் முக்கிய கூறுகள் நான்கினை உதாரணங்களுடன் விளக்குக. (8 புள்ளிகள்)

   (2+4+6+8 = 20 புள்ளிகள்)

02. "தொடர்பாடலுக்கும் மானுட இடைத் தொடர்புகளுக்கும் இடையே பிரிக்க முடியாத பிணைப்பு காணப்படுகிறது."
   1) தொடர்பாடல் பற்றிய பதவிளக்கத்தினை பொருள் விளங்கும் வண்ணம் விளக்குக. (2 புள்ளிகள்)
   2) தொடர்பாடலின் இயல்புகள் நான்கினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினைப் பற்றி விளக்குக. (4 புள்ளிகள்)
   3) ஆளுள் தொடர்பாடலுக்கும் ஆளிடைத் தொடர்பாடலுக்கும் இடையிலான வேறுபாடுகள் மூன்றினைபெயரிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)
   4) தொடர்பாடலின் மூலமாக நிறைவேற்றப்படுகின்ற பணிகள் நான்கினைக் குறிப்பிட்டு விளக்குக. (8 புள்ளிகள்)

   (2+4+6+8 = 20 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

03. "சமூகக் கருத்தியலில் தொடர்பாடல் ஊடகம் ஒரு வலுவான கருவியாகும்.

1) ஷனோன் மற்றும் வீவரின் தொடர்பாடல் மாதிரியின் விசேட இயல்புகள் நான்கினைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)
2) பிரசித்த பண்பாட்டின் பண்புகள் இரண்டினை விபரிக்குக. (4 புள்ளிகள்)
3) ஒரு நாட்டிலுள்ள பண்பாட்டின் விருத்திக்கு "பண்பாட்டு பரிமாற்றம்" உதவுமாற்றை மூன்று அம்சங்களைப் பயன்படுத்தி விளக்குக. (6 புள்ளிகள்)
4) சமூக ஊடகங்களினால் ஏற்படும் சாதக பாதகங்களை தலா இரண்டு அம்சங்களினை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (8 புள்ளிகள்)

(2+4+6+8 = 20 புள்ளிகள்)

04. "ஊடக விளங்கறிவு பல்வேறு திறன்களின் ஒருங்கு சேர்க்கையாகும்."

1) விமர்சன ரீதியான பெறுநர் அவசியம் கொண்டிருக்க வேண்டிய பண்புகள் நான்கினைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)
2) செய்திகளை உருவாக்கவும் விநியோகிக்கவும் பயன்படுத்தக்கூடிய சமூக ஊடகப் பிரயோகங்கள் நான்கினைப் பெயரிட்டு அவற்றுள் இரண்டினது செயற்பாடுகள் தொடர்பில் சுருக்கமாக விபரிக்குக. (4 புள்ளிகள்)
3) டபிள்யூ. ஜேம்ஸ் பொடரின் கூறியதன் படி உயர் ஊடக விளங்கறிவைப் பெறுவதன் அவசியம் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)
4) புதிய ஊடகங்களில் காணக் கிடைக்கும் பண்புகள் நான்கினை விளக்குக. (8 புள்ளிகள்)

(2+4+6+8 = 20 புள்ளிகள்)

05.
1) வாய்மொழித் தொடர்பாடலின் பணிகள் நான்கினைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)
2) பாடசாலை ஊடக வட்டத்தில் குழுத்தொடர்பாடலைப் பயன்படுத்துவதன் இரண்டு அனுகூலங்களை சுருக்கமாக விபரிக்குக. (4 புள்ளிகள்)
3) பாரம்பரிய ஊடகத்தின் சிறப்பியல்புகள் மூன்றினை விபரிக்குக. (6 புள்ளிகள்)
4) சமூகமயமாதல் செயற்பாட்டில் செல்வாக்குச் செலுத்தும் பாரம்பரியத் தொடர்பாடல் முறைகள் நான்கினை விளக்குக. (8 புள்ளிகள்)

(2+4+6+8 = 20 புள்ளிகள்)

06.
1) ஊடகப் பண்பாடு தற்கால உலகில் மேற்கொள்ளும் பணிகள் நான்கினைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)
2) வெகுசன ஊடகங்களினால் ஆற்றப்படும் விசேட பணிகள் தொடர்பில் பின்வருவனவற்றை பெயரிடுக.
   - பொருட்கோடல்
   - மேற்பார்வை

   (4 புள்ளிகள்)
3) ஊடகதிறனாய்வில் பயன்படுத்தப்படக்கூடிய கருத்தியல்கள் மூன்றினை விளக்குக. (6 புள்ளிகள்)
4) புதிய ஊடக பயன்பாட்டில் காணக்கிடைக்கின்ற மொழி ரீதியான போக்குகள் நான்கினை உதாரணங்களுடன் விளக்குக. (8 புள்ளிகள்)

(2+4+6+8 = 20 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!